5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடைகோடியில் இருக்கும் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, அதற்கு மேலாக பொது நிறுவனங்கள் குழுவிலே 4 ஆண்டுக்காலம் பணியாற்ற வாய்ப்புக் கொடுத்து, அதிலே 2 ஆண்டுகள் தலைவர் பதவியும் கொடுத்து என்னை கௌரவித்தமைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, 1995-96ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 266 முதல் 268 வரையிலான 3 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ஆர். சிங்காரம், அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராகிய நான் பத்தாவது சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவின் 1995-96ஆம் ஆண்டிற்கான 31-வது அறிக்கையைப் போதிய கால அவகாசம் இல்லாததால், அச்சிடப்படாத அறிக்கையாகப் பேரவைக்கு அளிக்கிறேன். இவ்வறிக்கையின் நகல்கள் உறுப்பினர்கள் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வே. கண்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.